# இனிமையான குழந்தைகளே! நிராகார பாபா தன்னுடைய வழியைக் கொடுத்து ஆஸ்திகர்களாக மாற்றுகின்றார், ஆஸ்திகர்களாக ஆவதின் மூலம் நீங்கள் பாபாவின் ஆஸ்தியை அடையலாம்

கேள்வி: எல்லையற்ற இராஜ்யத்தை அடைவதற்காக எந்த இரண்டு விஷயங்களின் மீது முழுமையான கவனம் கொடுக்க வேண்டும்?

பதில்: 1. படிப்பின் மீதும் 2. சேவையிலும் முழு கவனம் வேண்டும். சேவைக்காக மிக நல்ல இலட்சணமும் வேண்டும். இந்த படிப்பு மிகவும் அதிசயமானதாகும், இதன்மூலம் நீங்கள் இராஜ்யத்தை அடைகிறீர்கள். துவாபர யுகத்திலிருந்து செல்வத்தை தானம் செய்வதின் மூலம் இராஜ்யம் கிடைக்கிறது ஆனால் இப்போது நீங்கள் படிப்பின் மூலம் இளவரசன் - இரளவரசியாக ஆகின்றீர்கள்.

பாடல்: நம்முடைய தீர்த்த யாத்திரை தனிப்பட்டது.............

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான குழந்தைகள் பாட்டின் ஒரு வரியைக் கேட்டீர்கள். உங்களுடைய தீர்த்த யாத்திரை - வீட்டில் அமர்ந்து கொண்டே அமைதியாக முக்திதாமம் சென்றடைவதாகும். உலகத்தினுடைய தீர்த்த யாத்திரை பொதுவானதாகும், உங்களுடையது தனிப் பட்டதாகும். மனிதர்களுடைய புத்தியின் தொடர்பு சாது- சன்னியாசிகளின் பக்கம் அதிகம் அலை பாய்ந்து கொண்டிருக்கிறது. குழந்தைகளாகிய உங்களுக்கு பாபாவை மட்டுமே நினைவு செய்வதற் கான வழி மட்டுமே கிடைக்கிறது. அவர் நிராகார தந்தையாவார். நிராகாரமானவரை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் நிராகார வழியில் செல்பவர்களே என்பதும் கிடையாது. உலகத்தில் நிறைய வழி முறைகள் இருக்கின்றன அல்லவா! இது ஒரே நிராகார வழியை நிராகார தந்தையே கொடுகின்றார், இதன்மூலம் மனிதர்கள் உயர்ந்ததிலும் உயர்ந்த பதவி ஜீவன்முக்தி அல்லது முக்தியை அடைகிறார்கள். இந்த விசயங்கள் எதையும் அவர்கள் தெரிந்திருக்க வில்லை. நிராகார மானவரை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள் என்று மட்டுமே வெறுமனே சொல்லி விட்டார்கள். அனேக விதமான வழிகள் இருக்கின்றன. சத்யுகத்தில் ஒரு வழி தான் இருக்கிறது. கலியுகத்தில் அனேக வழிகள் இருக்கின்றன. அனேக தர்மங்கள், இலட்சம்-கோடி வழிகள் இருக்கும். ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவருக்கும் அவரவருடைய வழியாகும். இங்கே குழந்தை களாகிய உங்களுக்கு ஒரு பாபா தான் உயர்ந்ததிலும் உயர்ந்தவர்களாக மாற்ற உயர்ந்ததிலும் உயர்ந்த வழியைக் கொடுக்கின்றார். உங்களுடைய சித்திரங்களைப் பார்த்து நிறைய பேர் என்ன இப்படி ஆக்கிவிட்டார்கள் என்று கேட்கிறார்கள்? முக்கியமான விசயம் என்ன? இது படைப்பவர் மற்றும் படைப்பினுடைய முதல்-இடை-கடைசியின் ஞானமாகும், இந்த ஞானத்தின் மூலம் நாங்கள் ஆஸ்திகர்களாக ஆகின்றோம் என்று சொல்லுங்கள். ஆஸ்திகர்களாக ஆவதின் மூலம் பாபாவிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது. நாஸ்திகர்களாக ஆவதின் மூலம் ஆஸ்தியை இழந்தோம். நாஸ்திகர்களை ஆஸ்திகர்களாக மாற்றுவது தான் இப்போது குழந்தைகளாகிய உங்களுடைய வேலையே ஆகும். இந்த அறிமுகம் உங்களுக்கு பாபாவின் மூலம் கிடைத்தது. திருமூர்த்தி சித்திரம் மிகவும் தெளிவாக இருக்கிறது. பிரம்மாவின் மூலம் கண்டிப்பாக பிராமணர்கள் வேண்டும் அல்லவா. பிராமணர்களின் மூலம் தான் யக்ஞம் நடக்கிறது. இது

மிகப்பெரிய யக்ஞ மாகும். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பாபா என்பதை முதலில் புரிய வைக்க வேண்டும். ஆத்மாக்கள் அனைவரும் சகோதர-சகோதரர்களாவர். அனைவரும் ஒரு பாபாவை நினைவு செய்கிறார்கள். ஆஸ்தி கூட படைப்பவர் பாபாவிடமிருந்து தான் கிடைக்கிறது என்று பாபா அவர்களுக்குப் புரிய வைக்கின்றார். படைப்பு களிடமிருந்து கிடைக்க முடியாது ஆகையினால் அனைவரும் ஈஸ்வரனை நினைவு செய்கிறார்கள். சொர்க்கத்தைப் படைப்பவர் பாபாவே ஆவார் மேலும் அவர் பாரதத்தில் தான் வருகின்றார், வந்து இந்தக் காரியத்தைச் செய்கின்றார். திருமூர்த்தி சித்திரம் மிகவும் நல்ல பொருளாகும். இவர் பாபா, இவர் தாதா ஆவார். பிரம்மாவின் மூலம் பாபா சூரியவம்ச குலத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கின்றார். என்னை நினைவு செய்தீர்கள் என்றால் பாவ கர்மங்கள் அழியும் என்று பாபா கூறுகின்றார். குறிக்கோள் முழுமையானதாக இருக்கிறது ஆகையினால் பாபா பதக்கங்களையும் செய்ய வைக்கின்றார். குறைந்ததிலும் குறைவாக உங்களுக்கு இரண்டு வார்த்தைகளில் புரிய வைக்கின்றோம் என்று சொல்லுங்கள். தந்தையிட மிருந்து வினாடியில் ஆஸ்தி கிடைக்க வேண்டும் அல்லவா. பாபா சொர்க்கத்தைப் படைப்பவர் ஆவார். இந்த பதக்கங்கள் (பேட்ஜ்) மிகவும் நல்ல பொருளாகும். ஆனால் நிறைய தேக- அபிமானமுடைய குழந்தைகள் புரிந்து கொள்வதில்லை. இதில் நம்முடைய ஒரு வினாடியினுடைய ஞானம் இருக்கிறது. பாபா வந்து பாரதத்தைத்தான் சொர்க்கமாக மாற்று கின்றார். புதிய உலகத்தை பாபா தான் ஸ்தாபனை செய்கின்றார். இந்த புருஷோத்தம சங்கம யுகம் என்று கூட பாடப்பட்டுள்ளது. இந்த ஞானம் முழுவதும் புத்தியில் வந்து கொண்டே இருக்க வேண்டும். சிலருக்கு யோகம் இருக்கிறது என்றால் ஞானம் இல்லை, தாரணை ஆவது இல்லை. சேவை செய்யக் கூடிய குழந்தைகளுக்கு ஞானத்தின் தாரணை நன்றாக ஏற்படும். தந்தை வந்து மனிதர்களை தேவதைகளாக்கும் சேவை செய்து குழந்தைகள் எந்த சேவையும் செய்ய வில்லை என்றால் அவர்கள் என்ன வேலைக்கு உதவுவார்கள்? அவர்கள் எப்படி மனதில் உயர முடியும்? அனைவரையும் இராவண இராஜ்யத் திலிருந்து விடுவிப்பது தான் என்னுடைய நடிப்பே, என்று பாபா கூறுகின்றார். இராம இராஜ்யம் மற்றும் இராவண இராஜ்யம் என்று பாரதத்தில் தான் பாடப்பட்டுள்ளது. இராமன் யார்? இதையும் தெரிந்திருக்கவில்லை. தூய்மையற்றவர்களை தூய்மை யாக்குபவர், பக்தர்களின் பகவான் ஒருவர் தான் என்று பாடவும் செய்கிறார்கள். எனவே யாராவது புதியவர்கள் உள்ளே வந்தார்கள் என்றால் முதலில் தந்தையின் அறிமுகத்தை அளியுங்கள். மனிதர்கள் ஒவ்வொருவரையும் பார்த்து புரிய வைக்க வேண்டும். எல்லையற்ற சுகத்தின் ஆஸ்தியைக் கொடுப்பதற்காகவே எல்லையற்ற தந்தை வருகின்றார். அவருக்கு தனக்கென்று சரீரம் இல்லை எனும்போது ஆஸ்தி எப்படி கொடுப்பார்? நான் இந்த பிரம்மாவின் உடலின் மூலம் இராஜயோகம் கற்றுக் கொடுத்து இந்த பதவியை அடைய வைக்கின்றேன் என்று அவரே கூறுகின்றார். இந்த பேட்ஜில் ஒரு வினாடியில் புரிய வைக்கும் விஷயம் இருக்கிறது! எவ்வளவு சிறிய பேட்ஜாக இருக்கிறது ஆனால் புரிய வைக்கக் கூடியவர்கள் மிகுந்த ஆத்ம-அபிமானிகளாக இருக்க வேண்டும். அப்படி மிகவும் குறைவானவர்களே இருக்கிறார்கள். இந்த உழைப்பு யாரிடமும் சென்றடைவதில்லை. ஆகையினால் பாபா கூறுகின்றார் சார்ட்(அட்டவணை) வைத்துப் பாருங்கள் - முழு நாளிலும் நாம் எவ்வளவு நேரம் நினைவில் இருக்கிறோம்? முழு நாளும் அலுவலகத்தில் காரியம் செய்து கொண்டே நினைவில் இருக்க வேண்டும். கர்மம் செய்யத் தான் வேண்டும்.

இங்கே யோகத்தில் அமர்த்தி பாபாவை நினைவு செய்யுங்கள் என்று கூறுகிறார்கள். அந்த சமயத்தில் கர்மம் செய்வதில்லை. நீங்கள் கர்மம் செய்து கொண்டே நினைவு செய்ய வேண்டும். இல்லையென்றால் அமருவதற்கான பழக்கம் ஏற்பட்டுவிடுகிறது. கர்மம் செய்து கொண்டே நினைவில் இருக்க வேண்டும், அப்போது தான் கர்மயோகி என்பது நிரூபணம் ஆகும். கண்டிப்பாக நடிப்பை நடித்து தான் ஆக வேண்டும், இதில் தான் மாயை தடையை ஏற்படுத்துகிறது. உண்மை யோடு சார்ட்டை யாரும் எழுதுவதும் இல்லை. அரை மணி, முக்கால் மணி நேரம் நினைவில் இருந்தோம் என்று சிலர் எழுதுகிறார்கள். அதுவும் காலையில் தான் நினைவில் அமர்ந்திருப் பார்கள். பக்தி மார்க்கத்தில் கூட அதிகாலையில் எழுந்து இராம மாலையை ஜபிக்கிறார்கள். அந்த சமயத்தில் ஒரே ஈடுபாட்டில் இருக்கிறார்கள் என்பதும் கிடையாது. இன்னும் நிறைய எண்ணங்களும் வந்து கொண்டிருக்கும். தீவிர பக்தர்களின் புத்தி கொஞ்சமும் நிற்பதில்லை. இது இடைவிடாது புத்தியில் வந்து கொண்டே யிருக்கும். புதிய விசயம் அல்லவா! கீதையில் கூட மன்மனாபவ என்ற வார்த்தை இருக்கிறது. ஆனால் கிருஷ்ணருடைய பெயரை கொடுத்ததின் மூலம் கிருஷ்ணரை நினைவு செய்து கொள்கிறார்கள், எதையும் புரிந்து கொள்வதே இல்லை. பேட்ஜ் கூடவே இருக்க வேண்டும்.

பாபா பிரம்மாவின் உடலில் வந்து புரிய வைக்கின்றார், நாம் அந்த தந்தையின் மீது அன்பு வைக்கிறோம் என்று சொல்லுங்கள். மனிதர்களுக்கு ஆத்மாவைப் பற்றிய ஞானமும் இல்லை பரமாத்மாவின் ஞானமும் இல்லை. பாபாவைத் தவிர வேறு யாரும் இந்த ஞானத்தை கொடுக்க முடியாது. இந்த திருமூர்த்தி சிவன் அனைத்திலும் முக்கியமானதாகும். பாபா மற்றும் ஆஸ்தி. இந்த சக்கரத்தைப் புரிந்து கொள்வது மிகவும் சகஜமானதாகும். கண்காட்சிகளின் மூலம் கூட இலட்சக்கணக்கில் பிரஜைகள் உருவாகிறார்கள் அல்லவா. இராஜாக்கள் குறைவானவர்களே இருக்கிறார்கள், அவர்களின் பிரஜைகள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். பிரஜைகள் நிறைய பேர் உருவாகிறார்கள், மற்றபடி இராஜாக்களை உருவாக்கு வதற்கு முயற்சி செய்ய வேண்டும். யார் அதிகம் சேவை செய்கிறார்களோ அவர்கள் கண்டிப்பாக உயர்ந்த பதவி அடைவார்கள். நிறைய குழந்தைகளுக்கு சேவையில் அதிக ஆர்வம் இருக்கிறது. வேலையை விட்டு விடட்டுமா, சாப்பிடு வதற்கு இருக்கவே இருக்கிறது. பாபாவினுடையவர்களாக ஆகி விட்டால் பிறகு சிவபாபாவின் பராமரிப்பையே பெற்று விடுவோம். ஆனால் பாபா கூறுகின்றார் - நான் வானப்பிரஸ்தம் அடைந்த வருக்குள் பிரவேசித்திருக்கிறேன் அல்லவா! தாய்மார்கள் கூட இளையவர்களாக இருக்கிறார்கள் என்றால் வீட்டில் இருந்து கொண்டே இரண்டு சேவைகளையும் செய்ய வேண்டும். பாபா ஒவ்வொருவருடைய சூழ்நிலையையும் பார்த்து வழி சொல்கிறார். திருமணம் போன்றவை களுக்கு ஒருவேளை அனுமதிக்க வில்லை என்றால் உபத்திரவமாகி விடும் ஆகையினால் ஒவ்வொருவருடைய கணக்கு-வழக்கைப் பார்த்து வழி சொல்கின்றார். குமாராக இருந்தால் நீ சேவை செய்யலாம் என்று சொல்வார். சேவை செய்து எல்லையற்ற தந்தையிடமிருந்து ஆஸ்தி அடையுங்கள் என்று சொல்வார். அந்த தந்தையிடமிருந்து உங்களுக்கு என்ன கிடைக்கும்? மண் துகள்தான் (வீணானவைகள்) அவையனைத்தும் மண்ணோடு மண்ணாக விடக்கூடியவைகளாகும். நாளுக்கு நாள் நேரம் (ஆயுள்) குறைந்து கொண்டே செல்கிறது. நம்முடைய சொத்திற்கு குழந்தை கள் வாரிசாக ஆவார்கள் என்று

நிறைய பேர் புரிந்து கொள்கிறார்கள். ஆனால் எதுவும் கிடைக்காது என்று பாபா கூறுகின்றார். சொத்துக்கள் அனைத்தும் அழிந்து விடும். பின்னால் வருபவர்கள் சாப்பிடுவார்கள் என்று அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். செல்வந்தர்களின் செல்வம் முடிந்து போவதற்கு ஒன்றும் அதிக நேரம் பிடிப்பதில்லை. மரணம் முன்னால் நிற்கிறது. யாரும் ஆஸ்தியை அடைய முடியாது. முழுமையான விதத்தில் புரிய வைப்பவர்கள் மிகக் குறைவான வர்களே இருக்கிறார்கள். அதிகம் சேவை செய்பவர்கள் தான் உயர்ந்த பதவி அடைவார்கள். எனவே அவர்களுக்கு மதிப்பும் வைக்க வேண்டும், இவர்களிடம் கற்றுக் கொள்ள வேண்டும். 21 பிறவிகளுக்கு மதிப்பு வைக்க வேண்டும். தானாகவே கண்டிப்பாக அவர்கள் உயர்ந்த பதவி அடைவார்கள், எனவே எங்கு எதற்கு மதிப்பு இருக்க வேண்டுமோ அங்கு மதிப்பு வைக்கத் தான் வேண்டும். தாங்களாகவும் கூட புரிந்து கொள்ள முடியும், என்ன கிடைத்ததோ அது நல்லது. இதிலேயே குஷியாகிறார்கள்.

எல்லையற்ற இராஜ்யத்திற்காக படிப்பு மற்றும் சேவையில் கவனம் கொடுக்க வேண்டும். இது எல்லையற்ற படிப்பாகும். இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. இந்தப் படிப்பின் மூலம் இங்கே நீங்கள் படித்து இளவரசனாக ஆகின்றீர்கள். எந்தவொரு மனிதனும் செல்வத்தை தானம் செய்கிறார்கள் என்றால் அவர்கள் இராஜாக்களிடம் அல்லது செல்வந்தர்களிடம் பிறவி எடுக் கிறார்கள். ஆனால் அவையனைத்தும் அரைக் கல்பத்திற்கான சுகமாகும். எனவே இந்தப் படிப்பின் மீது அதிக கவனம் கொடுக்க வேண்டும். நாம் நம்முடைய கிராமத்திற்கு சென்று சேவை செய்ய வேண்டும் என்று சேவைக்கான கவலை இருக்க வேண்டும். நிறைய பேருக்கு நன்மை ஏற்படும். இப்படிப்பட்ட சேவைக்கான ஆர்வம் இன்னும் யாருக்கும் இல்லை என்பதை பாபா தெரிந்துள்ளார். நல்ல இலட்சணங்களும் வேண்டும் அல்லவா! சேவைக்கு பங்கம் ஏற்படுத்தி இன்னும் யக்ஞத்தின் பெயரை கெடுத்து தங்களுக்கு நஷ்டம் ஏற்படுத்திக் கொள்வது போல் ஆகி விடக்கூடாது. பாபா ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நன்றாக புரிய வைக்கின்றார். பேட்ஜ் போன்றவைகளைப் பற்றி எவ்வளவு கவலை இருக்கிறது! நாடகத்தின்படி நேரம் ஆகிறது என்று புரிந்து கொள்ளப்படுகிறது. இந்த இலஷ்மி-நாராயணனுடைய டிரான்ஸ்லைட் சித்திரம் கூட நன்றாக இருக்கிறது. ஆனால் குழந்தைகள் மீது இன்று பிரகஸ்பதி திசை இருக்கிறது என்றால் நாளை இராகு திசை வந்து விடுகிறது. நாடகத்தில் சாட்சியாக இருந்து நடிப்பைப் பார்க்க வேண்டியிருக்கிறது. உயர்ந்த பதவி அடையக் கூடியவர்கள் மிகக் குறைவானவர்களே இருக்கிறார்கள். கிரகச்சாரம் இறங்கியும் விடலாம். கிரகச்சாரம் இறங்கி விட்டால் பிறகு தாண்டி (கடந்து) விடுகிறார்கள். முயற்சி செய்து தங்களுடைய வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ள வேண்டும், இல்லையென்றால் கல்ப- கல்பத் திற்கும் சத்தியநாசமாகி விடும். கல்பத்திற்கு முன்போலவே கிரகச்சாரம் வந்துள்ளது என்று புரிந்து கொள்வார்கள். ஸ்ரீமத்படி நடக்கவில்லை என்றால் பதவியும் கிடைக்காது. பகவானுடைய ஸ்ரீமத் உயர்ந்ததிலும் உயர்ந்ததாகும். இந்த இலஷ்மி-நாராயணனுடைய சித்திரத்தை உங்களைத் தவிர வேறு யாரும் புரிந்து கொள்ள முடியாது. சித்திரத்தை நன்றாக உருவக்கியுள்ளீர்கள் என்று சொல்வார்கள், உங்களுக்கு இந்த சித்திரத்தைப் பார்த்தவுடன் மூலவதனம், சூட்சுமவதனம், ஸ்தூலவதனம் முழு சிருஷ்டி சக்கரமும் புத்தியில் வந்து விடும். நீங்கள் வரிசைக்கிரமமான முயற்சியின்படி

ஞானம் நிரம்பியவர்களாக ஆகின்றீர்கள். பாபாவிற்கு இந்த சித்திரத்தைப் பார்த்து மிகுந்த குஷி ஏற்படுகிறது. நாம் படித்துவிட்டு இப்படி ஆகின்றோம் என்று மாணவர்களுக்கு குஷி ஏற்பட வேண்டும் அல்லவா! படிப்பின் மூலம் தான் உயர்ந்த பதவி கிடைக்கிறது. பாக்கியத்தில் என்ன இருக்குமோ அது கிடைக்கும் என்பது கிடையாது. முயற்சியின் மூலம் தான் பலன் கிடைக்கிறது. முயற்சி செய்ய வைக்கக் கூடிய பாபா கிடைத்திருக்கிறார், அவருடைய ஸ்ரீமத்படி நடக்கவில்லை என்றால் மோசமான நிலை ஏற்படும். யாருக்கும் முதலில் இந்த பேட்ஜைப் பற்றி புரிய வையுங்கள் பிறகு யார் தகுதியானவர்களாக இருப்பார்களோ, அவர்கள் எங்களுக்கு இது கிடைக்குமா என்று கேட்பார்கள்? ஏன் கிடைக்காது. யார் இந்த தர்மத்தைச் சேர்ந்தவர்களோ, அவர்களுக்கு அம்பு தைக்கும். அவர்களுக்கு நன்மை விளையலாம். பாபா ஒரு வினாடியில் கைகளில் சொர்க்கத்தைக் கொடுக்கின்றார், இதில் அதிக குஷி இருக்க வேண்டும். சிவனுடைய பக்தர்களுக்கு நீங்கள் இந்த ஞானத்தை கொடுங்கள். என்னை நினைவு செய்தீர்கள் என்றால் இராஜாவுக்கெல்லாம் இராஜாவாக ஆகி விடுவீர்கள் என்று சிவபாபா கூறுகின்றார் என்று சொல்லுங்கள். முழு நாளும் இந்த சேவையே செய்யுங்கள். குறிப்பாக பனாரசில் நிறைய சிவன் கோயில்கள் இருக்கின்றன, அங்கே நன்றாக சேவை செய்யலாம். யாராவது வருவார்கள். மிக சுலபமான சேவையாகும். யாராவது செய்து பாருங்கள், உணவு கிடைக்கத்தான் செய்யும், சேவை செய்து பாருங்கள். அங்கே சென்டரும் இருக்கிறது. அதிகாலையில் கோயிலுக்கு சென்று இரவு திரும்பி வாருங்கள். சென்டரை உருவாக்கி விடுங்கள். எல்லாவற்றையும் விட அதிகமாக நீங்கள் சிவனுடைய கோயில்களில் சேவை செய்யலாம். உயர்ந்ததிலும் உயர்ந்தது சிவனுடைய கோயில்களாகும். மும்பையில் பபுல்நாத் கோயில் இருக்கிறது. முழு நாளும் அங்கு சென்று சேவை செய்து நிறைய பேருக்கு நன்மை செய்யலாம். இந்த பேட்ஜே போதுமானது. முயற்சி செய்து பாருங்கள். இந்த பேட்ஜ்களை இலட்சம் என்ன 10 லட்சம் உருவாக்குங்கள் என்று பாபா கூறுகின்றார். வயதானவர்கள் மிகவும் நன்றாக சேவை செய்யலாம். நிறைய பிரஜைகள் உருவாகி விடுவார்கள். என்னை மட்டும் நினைவு செய்யுங்கள் என்று பாபா கூறுகின்றார் அவ்வளவு தான், மன்மனாபவ என்ற வார்த்தையை மறந்து விட்டீர்கள். பகவானுடைய மகாவாக்கியம் அல்லவா! கிருஷ்ணன் பகவானா என்ன! அவர் முழுமைமையாக 84 பிறவிகள் எடுக்கின்றார். சிவபாபா இந்த கிருஷ்ணரையும் கூட இந்த பதவியை அடைய வைக்கின்றார். பிறகு ஏமாற்றம் அடைவதற்கு என்ன அவசியம் இருக்கிறது? என்னை மட்டும் நினைவு செய்யுங்கள் என்று தான் பாபா கூறு கின்றார். நீங்கள் மிக நன்றாக சிவனுடைய கோயில்களில் சேவை செய்யலாம். சேவையின் வெற்றிக்காக ஆத்ம-அபிமான நிலையில் நிலைத்திருந்து சேவை செய்யுங்கள். மனம் தூய்மையாக இருந்தால் அனைத்து மன ஆசைகளும் பூர்த்தியாகும். பாபா குறிப்பாக பனாரஸ்காக வழி கூறுகின்றார், அங்கே வானப்பிரஸ்திகளின் ஆசிரமம் கூட இருக்கிறது. நாங்கள் பிரம்மாவின் குழந்தைகள் பிராமணர்கள் என்று கூறுங்கள். பாபா பிரம்மாவின் மூலம் கூறுகின்றார், என்னை நினைவு செய்தீர்கள் என்றால் விகர்மங்கள் வினாசம் ஆகி விடும், வேறு எந்த வழியும் இல்லை. காலையிலிருந்து இரவு வரை சிவனுடைய கோயிலில் அமர்ந்து சேவை செய்யுங்கள். முயற்சி செய்து பாருங்கள். என்னுடைய கோயில்கள் நிறைய இருக்கின்றன என்று சிவபாபா அவரே கூறுகின்றார். உங்களை யாரும் எதுவும் சொல்ல மாட்டார்கள், இவர்கள்

சிவபாபாவை மகிமை பாடுகிறார்கள் என்று இன்னும் குஷி அடைவார்கள். இந்த பிரம்மா, இவர் பிராமணன் ஆவார், இவர் ஒன்றும் தேவதை அல்ல என்று சொல்லுங்கள். இவரும் கூட சிவபாபாவை நினைவு செய்து இந்தப் பதவியை அடைகிறார். இவர் மூலம் சிவபாபா கூறுகின்றார், என்னை மட்டும் நினைவு செய்யுங்கள். எவ்வளவு சுலபமானதாக இருக்கிறது. வயதானவர்களை யாரும் அவமதிக்க மாட்டார்கள். பனாரஸில் இது வரை இதைப்போல் எந்த சேவையும் நடக்கவில்லை. பேட்ஜ் அல்லது சித்திரங்களை வைத்துப் புரிய வைப்பது மிகவும் சகஜமாகும். யாராவது ஏழைகளாக இருந்தால் உங்களுக்கு இலவசமாகத் தருகிறோம் என்று சொல்லுங்கள், செல்வந்தர்களாக இருந்தால் நீங்கள் கொடுத்தீர்கள் என்றால் நிறைய பேருக்கு அச்சடிக்கலாம் அதில் உங்களுக்கு நன்மை ஏற்படும் என்று சொல்லுங்கள். உங்களுடைய இந்தத் தொழில் அனைத்திலும் வேகமாகி விடும். யாராவது முயற்சி செய்து பாருங்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) வாழ்வில் ஞானத்தை தாரணை செய்து பிறகு சேவை செய்ய வேண்டும். யார் அதிகம் சேவை செய்கிறார்களோ, நல்ல இலட்சணங்கள் இருக்கிறதோ அவர்களுக்கு கண்டிப்பாக மதிப்பு வைக்க வேண்டும்.

2) கர்மம் செய்து கொண்டிருக்கும்போதே நினைவில் இருப்பதற்கான பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். சேவையின் வெற்றிக்காக தங்களுடைய நிலையை ஆத்ம அபிமான முடையதாக மாற்றிக் கொள்ள வேண்டும். மனதைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

வரதானம் : அனைத்து பிரச்சனைகளுக்கும் விடை கொடுக்கும் விழா கொண்டாடக் கூடிய சமாதான சொரூபம் ஆகுக.

நீங்கள் எப்போது தனது சம்பூர்ன ஸ்திதியில் நிலைத்திருப்பீர்களோ அப்போது தான் சமாதான சொரூப ஆத்மாக்களின் மாலை தயாராகும். சம்பூர்ன ஸ்திதியில் இருக்கும் போது பிரச்சனைகள் குழந்தையின் விளையாட்டாக அனுபவமாகும், அதாவது சமாப்தி ஆகிவிடும். பிரம்மா பாபாவின் முன் ஒரு குழந்தை பிரச்சனையை எடுத்து வந்தால் அந்த பிரச்சனைக்கான வார்த்தைகள் பேசுவதற்கான தைரியம் இருக்காது. அந்த விசயங்களையே மறந்து விடுவார். அதே போன்று குழந்தைகளாகிய நீங்களும் சமாதான சொரூபம் ஆகும் போது அரை கல்பத்திற்கு பிரச்சனைகளுக்கு விடை கொடுக்கும் விழா நடந்து விடும். உலக பிரச்சனைகளுக்கு சமாதானமே மாற்றம் ஆகும்.

சுலோகன்: யார் சதா ஞானச் சிந்தனை செய்கிறார்களோ, அவர்கள் மாயையின் ஈர்ப்பிலிருந்து தப்பித்து விடுவார்கள்.

தனது சக்திசாலியான மனதின் மூலம் சக்தி கொடுக்கும் சேவை செய்யுங்கள்:

தனது டபுள் லைட் பரிஸ்தா சொரூபத்தில் நிலைத்திருந்து, சாட்சியாகி அனைத்து நடிப்புகளையும் பார்த்தாலும் சக்தி அதாவது சகயோகம் கொடுங்கள். ஏனெனில் அனைவருக்கும் நன்மை செய்வதற்கு நீங்கள் நிமித்தமாக இருக்கிறீர்கள். இவ்வாறு சக்தி கொடுப்பது தான் அதனை கடைபிடிப்பதாகும். ஆனால் உயர்ந்த ஸ்திதியில் நிலைத்திருந்து சக்தி கொடுங்கள். வார்த்தைகளின் சேவையின் கூடவே மனதில் சுப பாவனைக்கான விருத்தி மூலம் சக்தி கொடுக்கும் சேவை செய்யுங்கள்.